Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 27 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஒக்ரோபர் 26, 2020

## யாழ் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் என அனுமதிக்கப்பட்ட இருவருக்கு கொரோனா



யாழ்.போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து, சுகயீனம் காரண மாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் பிரிவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுமதிக் கப்பட்ட ஒருவருக்கும் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவ ருக்குமே இவ்வாறு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இருவரிடமும் நேற்றைய தினம் பெறப்பட்ட மாதிரியின் அடிப்படை யில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று மாலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தை கொரோனா தொற்று பரவல் கொத் தணியுடன் தொடர்புடைய தென்னிலங் கையைச் சேர்ந்த இருவருக்கே இவ்வாறு கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட் டுள்ளார்.

தொற்றுக்குள்ளான இருவரும் தனி மைப்படுத்தல் நிலையங்களில் இருந்த வர்கள் என்பதுடன், யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகயீனம் காரண மாக அனுமதிக்கப்பட்டபோது தனிமைப்படுத்தல் விடுதியிலேயே அனுமதிக்கப்பட்டமையாலும் மக்கள் பீதியடையதேவையில்லை.

## கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் 10 பேருக்கு கொரோனா தொற்று


கொழும்பு ரிஜ்வே சிறுவர் போதனா வைத்திய சாலையில் பிள்ளைகளு டன் தங்கியிருந்த தாய் மார் மூவர், சிகிச்சைபெற்றுவந்த சிறுவர்கள் ஏழு பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இன்று மதியம் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள் ளது.

பேலியகொட மீன் சந் தையுடன் தொடர்புடைய வர்களே இவ்வாறு அடை யாளம் காணப்பட்டுள்ள தாக கொழும்புத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

## கொரோனா வலையம் வரைபடம் வெளியீடு

கொரோனா வைரஸ் தொற்று நாடளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. இந்நிலையில், இதில், அதிக ஆபத்தான பிரதேசங்கள் எவை? என்ற வரைபடத்தினை இலங்கை சுகாதராத அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு வெளியிட்டுள்ளது.




## நாடு முழுவதும் முடங்கும்?



மக்களின் பாது காப்பை கருத்திற் கொண்டு சிலவேளை முழுநாட்டையும் முடக்கு வது அவசியமாகுமென பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

03

## 8 ஆயிரத்தைக் கடந்தது கொரோனா தொற்று!
### இன்று 265 பேருக்கு

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண் ணிக்கை எட்டாயிரத்தை கடந்துள்ள நிலையில் 280 பேர் கொரோனா தொற் றுக்கு உள்ளாகி உள்ளதாக சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

தனிமைப்படுத்தல் நிலை யங்களில் இருந்து 15 பேருக்கும் திவுலப்பிட்டி மற்றும் பேலியகொடை கொத்தணியில் இருந்து 265 பேருக்கும் இவ் வாறு இன்று கொரோனா தொற்று உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

அதன்படி, திவுலப் பிட்டி மற்றும் பேலிய கொடை கொவிட் கொத் தணியில் இதுவரை 4678 பேருக்கு கொரோனா தொற்று

03

## ஒரே நாளில் 9189 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

நாட்டில் நேற்றைய தினம் மாத்திரம் 9,189 பிசிஆர் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக கொவிட்-19 பரவலை கட் டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள் ளது.

இதுவரை மொத்தமாக நான்கு லட்சத்து 55 ஆயிரம் பிசிஆர் பரிசோதனைகள் நாட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

முப்படையினரால்

03

## யாழில் இருவருக்கு கொரோனா தொற்று
### குருநகர், பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம் குருநகர் கடலுணவு நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் குருநகரையும் மற் றையவர் பருத்தித்துறையையும் சேர்ந்தவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பேலியகொட மீன் சந்தைக்கு மீன் கூலர் வாகனத்தில் சென்று வந்த இருவர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு கோரோனா தொற்று உள்ளமை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் கடந்த வெள் ளிக்கிழமை வீடுகளில் சுயதனிமைப் படுத்தலுக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் பெறப்பட்ட மாதிரி களின் அடிப்படையில்

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

## ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 1,076 பேர் கைது



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று (திங்கட்கிழமை) காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 16 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 4ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 156 வானங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 103 பேர் பூரண குணம்

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்தவர்களில் மேலும் 130 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3,933 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 16 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று!



மட்டக்களப்பு கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவிலுள்ள வாழைச்சேனை ஓட்டுமாவடி பிரதேசத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உள்ளதாக இன்று (திங்கட்கிழமை) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 27 பேருக்கு கொரோனா தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில், டெங்கு தாக்கத்தினால் இன்று ஒருவர் உட்பட 113 பேர் இதுவரைக்கும் உயிரிழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தெற்று தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் “கிழக்கு மாகாணத்தில் பேலியகொடை மீன்சந்தையில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக பல இடங்களில் தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய மட்டக்களப்பு ஓட்டுமாவடி பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட பி.சி.ஆர். பிரிசோதனையில் 11 பேருக்கு கொரோனா தொற்றுறுதி கண்டுபிடிக்கப்பட்டு அந்த பிரதேசம் உரடங்கு சட்டம் பிற்கப்பட்டுள்ளது

இந்த நிலையில் பேலியகொடை மீன் சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி ஆர் பரிசோதனையில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உள்ளதாக கண்டறியப்படடதை யடுத்து கிழக்கில் இதுவரை 43 பேருக்கு கொரோனா தொற்று உள்ளவர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஓமட்டுமாவடி பிரதேசத்தில் இதுவரை இதுவரை 113 பேர் டெங்கு தாக்கத்தினால் உயிரிழந்துள்ளதாகவும் 36 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனாவை விட மோசமானது டெங்கு எனவே இவைகளை கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

எனவே தற்போது வீட்டில் முடங்கியிருக்கு பொதுமக்கள் தமது வீடு மற்று அதன் பகுதிகளை துப்பரவாக வைத்திருக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்வதாகவும்” அவர் தெரிவித்தார்.

## வாழைச்சேனையில் 11 பேருக்கு கொரோனா ஊடரங்கு அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தல் ஊடரங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், முக்கிய தேவை ஏதும் இல்லாமல் வீட்டை விட்டு வெளியில் செல்வோருக்கு எதிராக இராணுவத்தினரும், பொலிஸாரும் தங்களின் கடமைகளை கடுமையான முறையில் கடைப்பிடித்து வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பதினொரு பேருக்கான கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினை அடுத்து, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தல் ஊடரங்கு சட்டம் நேற்றுன் காலை முதல் மறு அறிவித்தல் வரை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சகல பிரதான வீதிகளும் வெறிச்சோடி காணப்படுவதுடன், அனைத்து வீதிகளிலும் இராணுவம் மற்றும் பொலிஸாரின் நடமாட்டங்களும், அவசர தேவைகளுக்கான பயணங்களை மேற்கொள்ளும் மக்களின் நடமாட்டங்களும் காணப்படுகின்றது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் காணப்படும் வியாபார நிலையங்கள், தனியார் அலுவலகம் உட்பட்டவை அனைத்தும் மூடப்பட்டு காணப்படுவதுடன், மீன் விற்பனை நிலையங்கள் முற்றாக மூடப்பட்டு காணப்படுகின்றது. அத்தோடு அத்தியாவசியமற்ற வியாபார நிலையங்களை பொலிஸார் மூடுமாறு பணிப்புரை விடுத்து வருகின்றனர்.

அத்தோடு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இருந்து எவரும் வெளி இடங்களுக்கு செல்ல முடியாத வகையிலும், வெளி இடங்களில் இருந்து வருபவர்கள் உள்ளே வர முடியாத வகையிலும் இராணுவம் மற்றும் பொலிஸார் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இறால் வாங்க சென்ற வடை வியாபாரிக்கு கொரோனா

பொலன்னறுவ மாவட்டத்திற்குட்பட்ட பகமுன பகுதியில் வடை விற்பனை கடை ஒன்றை நடத்திச் சென்ற நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பகமுன பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளார்.

குறித்த நபர் கடந்த தினங்களில் இறால் வாங்குவதற்காக பேலியகொட மீன் சந்தைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த நபருடன் தொடர்புடையவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# 20க்கு ஆதரவாக வாக்களித்தவர்களை நீக்கினால் மட்டுமே முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து பயணிப்போம்

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்துள்ள அவர், “20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரை தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து இடைநிறுத்துவதற்கு அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த முடிவை வரவேற்கின்றோம்.



அதேபோல 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஹக்கீமும் ரிஷாட்டும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் ஹக்கீமும் ரிஷாட்டும் இரட்டை வேடம் போடுகின்றனர் என்ற சந்தேகம் நிரூபணமாகும். அதே போல் இரு தரப்பினருடனும் நாங்கள் இணைந்து பயணிப்பதிலும் சிக்கல் உருவாகும்.

எனவே 20ஐ ஆதரித்தவர்களைக் கட்சியில் இருந்தும் நாடாளுமன்றத்தில் இருந்தும் வெளியேற்ற இரண்டு கட்சித் தலைவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போதுதான் நாங்கள் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து தொடர்ந்து பயணிக்க முடியும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை நிலைய சேவையாளர்களுக்காக ரயில் சேவைகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ரயில் சேவைகள் தவிர்ந்த, பிரதான மார்க்கம் புத்தளம் மார்க்கம் மற்றும் களனிவெளி மார்க்கம் என்பனவற்றில் இடம்பெறவுள்ள அனைத்து ரயில் சேவைகளும் இன்று முதல் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ரயில் கட்டுப்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடியுங்கள்

## வடமாகாண கொரோனா தொற்று தடுப்பு செயலணி கூட்டத்தில் தீர்மானம்..!

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ள நிலையில் மாவட்டத்தில் 226 குடும்பங்களை சேர்ந்த 424 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளதாகவும், 14 பேர் கட்டாய தனிமைப்படுத்தில் உள்ளதாகவும் கூறியிருக்கும் யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன்,

வடமாகாண கொரோனா தடுப்பு செயலணி கூட்டத்தில் போக்குவரத்து உள்ளிட்ட மக்களின் இயல்பு வாழ்வை குழப்பாத வகையில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவது குறித்தும், மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பது குறித்தும் பேசப்பட்டதாகவும் கூறியிருக்கின்றார்.

மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் மாகாண கொரோனா தடுப்பு செயலணியின் கலந்துரையாடல் இன்று நடைபெற்றது. குறித்த கலந் துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களினதும் சமகால நிலமைகள் தனித்தனியாக ஆராயப்பட்டுள்ளதுடன், 5 மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டிருக்கின்றது.

விசேடமாக சுகாதார அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவதுடன் மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் பேசப்பட்டிருக்கின்றது. மேலும் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். என்ற விடயமும் இந்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் யாழ்.மாவட்டத்தில் 4 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். இந்நிலையில் 226 குடும்பங்களை சேர்ந்த 424 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளதுடன், 14 பேர் கட்டாய தனிமைப் படுத்தலில் உள்ளனர்.

இந்நிலையில் மாவட்டத்திற்குள் கொரோனா தொற்று பரவாமலிருப்பதற்கு போக்குவரத்து உள்ளிட்ட இயல்பு வாழ்வை குழப்பாத வகையில் சகலரும் சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாக பின்பற்றவேண்டும். மேலும் பொது மக்கள் முடிந்தளவு தேவையற்ற நடமாட்டங்களை நிறுத்துவதுடன்,

அதனையும் மீறி நடமாடினால் தாம் எங்கு செல்கிறோம்? யாரை சந்திக்கிறோம்? என்ற விபரங்களை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அலுவலகங்களிலும் தமது ஊழியர்கள் தொடர்பான தகவல் திரட்டுக்களை வைத்திருக்கவேண்டும்.

மேலும் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு வருவோர் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதேபோல் யாழ்.மாவட்டத்திலிருந்து கடல்வழியாக கடத்தலில் ஈடுபடுவது தொடர்பாகவும் உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட செயலர் மேலும் கூறியுள்ளார்.



## நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு பூட்டு

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நாடாளுமன்ற கட்டடத் தொகுதி மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இரண்டு நாட்களுக்கு நாடாளுமன்றம் மூடப்பட்டிருக்கும் என்றும் அதன் பணியாளர்களை வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற பாதுகாப்புக்காக சேவையில் அமர்த்தப்பட்ட விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட் டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதி முற்றாக கிருமிநீக்கம் செய்யப்பட வுள்ளதுடன், மீண்டும் 28ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

## டெங்குக் காய்ச்சலால் பெண் உயிரிழப்பு

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில், டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர், இன்று (26) உயிரிழந் துள்ளார் என, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச். எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி ஜும்ஆ பள்ளிவாசல் வீதி, மூன்றாம் குறுக்கில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயார் 43 வயதுடைய பெண்ணொருவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, டெங்கு நுளம்புகள் பரவும் வகையில், நீர்த் தாங்கி, வடிகாண் கழிவுகளை வைத்திருந்தவர்களுக்கு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டதுடன், இதற்கு பிறகு இவ்வாறு சுத்தம் இல்லாமல் இருந்தால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு வருகின்றது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை 211 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக் கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில்...

முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறு திப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரண்டு பேரும் கோவிட் -19 சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றப்படுவதுடன், அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் தொடர்ந்து சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என் றும் அதிகாரிகள் கூறினர்.

### ஒரே நாளில்...

கொண்டு நடத்தப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களின் ஊடாக 55 ஆயிரத்து 426 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

இதேவேளை, இன்று முற்பகல் அளவில் மினு வாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்களின் எண் ணிக்கை நான்காயிரத்து 4,400ஆக உயர்வடைந் துள்ளது. அவர்களுள் 1041 பேர் ஆடைத் தொழிற் சாலையின் பணியாளர்கள்.

இதனிடையே, இலங்கையில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 7,872 ஆக காணப்படுகிறது. அவர்களுள் 3,933 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்கள். தொற்றின் காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

### நாடு முழுவதும்...

சுவிட்சர்லாந்தில் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் ஃபர்க்லர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இன்று சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே, பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். .

இரண்டு நாடுகளுக்கு இடையிலான முதலீடுகள், ஏற்றுமதி, சுற்றுலாத்துறை ஆகியன தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். அத்துடன், கொவிட்-19க்கு எதிரான செயற்பாடுகள் குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

### 8 ஆயிரத்தை...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரை 8152 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 3,933 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

4,203 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில், 16 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# விசேட அதிரடிப்படையினருக்கு கொரோனா
## பல முகாம்கள் தனிமைப்படுத்தப்பட்டன



களனி, களுபோவில, ராஜகிரிய பகுதிகளில் உள்ள மூன்று விசேட அதிரடிப்படை முகாம்களை அதிகாரிகள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

பத்திற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேலியகொட மீன்சந்தைக்கு மீன் வாங்குவதற்காக சென்றவர்களே இவ்வாறு கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டுள்ள விசேட அதிரடிப்படையினரில் சிலர் முன்னர் விசேட பிரமுகர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக நுழைவு வெட்டுப்புள்ளி வெளியீடு!

2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.

www.ugc.ac.lk என்ற இணையத் தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாக தாம் தெரிவாகியுள்ள பாடநெறி மற்றும் பல்கலைக்கழகம் ஆகிய வற்றை அறிந்துகொள்ள முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# போலந்து ஜனாதிபதிக்கு கொரோனா தொற்று உறுதி



போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் துடாவிற்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் தான் நலனாக இருப்பதாக அறிவித்துள்ளார்.

48 வயதுடைய அவருக்கு வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையை அடுத்து தொற்று இருப்பது கண்டறியப்பட்டது, ஆனால் அவர் வைரஸால் பாதிக்கப்பட்ட அறிகுறிகள் தெளிவாகத் தெரியவில்லை.

கொரோனா தொற்று உறுதியாகிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆகிய தலைவர்களுடன் போலந்து ஜனாதிபதியும் தற்போது இணைந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக போலந்தில் கடந்த வெள்ளிக்கிழமை 13,600 க்கும் மேற்பட்ட புதிய நாளாந்த அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.

இதன் காரணமாக ஆரம்ப பாடசாலைகள் மற்றும் உணவகங்களை ஓரளவு மூடுவதை உள்ளடக்கிய நாடு தழுவிய சிவப்பு அறிவித்தலுடன் முடக்கம் இப்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

# இரண்டாவது அலைக்கு காரணம் உக்ரைன் பிரஜைகள்?

உக்ரைனிலிருந்து வந்த விமான பணியாளர்கள் குழுவைச் சேர்ந்த ஒருவரே இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலைக்கு காரணம் என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள அறிக்கையில் புலனாய்வு அமைப்புகள் இதனை தெரிவித்துள்ளதாக குறித்த செய்தியில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

துருக்கியிலிருந்து வந்த விமானத்தில் இலங்கை வந்த உக்ரைன் பிரஜைகள் சீதுவையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்புள்ளமை உறுதியானதைத் தொடர்ந்து அவர் கொழும்பு தொற்றுநோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹோட்டலில் தங்கியிருந்த குறித்த நபர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதால் அவருடன் தொடர்புடைய ஹோட்டல் பணியாளர்களை தனிமைப்படுத்த வேண்டும் என்றபோதிலும் ஹோட்டல் நிர்வாகம் இதனை பின்பற்றவில்லை என சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, குறிப்பிட்ட ஹோட்டலில் பணியாற்றும் 60 பணியாளர்களில் 18 பேர் தங்கள் வீடுகளுக்கு சென்றுவருபவர்கள் என்றும் அவர்களில் ஐவர் இதுவரை கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அச் செய்தியில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஹோட்டல் பணியாளர்கள் மற்றும் மினுவங்கொட ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களிடம் காணப்பட்ட வைரஸ்கள் ஒரே மாதிரியானவையாக காணப்படுகின்றன என்றும் இது இரண்டாவது அலை சீதுவ ஹோட்டலில் இருந்தே ஆரம்பமானது என்பதை இது புலப்படுத்தியுள்ளது எனவும் குறித்த சிங்கள நாளிதழ் அந்த செய்தியில் தெரிவித்துள்ளது.

# ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் இருவருக்கு கொரோனா



ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில் பணிப்புரிந்த இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தில், கடந்த 23 ஆம் திகதி 57 மீனவர்கள் உட்பட மூவருக்கு பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியாகியுள்ள நிலையில் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர், கடந்த 21ஆம் திகதி, பெலியகொட மீன் சந்தைக்குச் சென்றமையால் சுய கட்டுப்பாட்டில் இருந்துள்ளார். ஆனால் மற்றொருவர், பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் கிடைக்கும் வரை சமூகத்தில் அலைந்து திரிவது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தினை சேர்ந்த மொத்தம் 57 மீனவர்கள் மற்றும் அண்மைய நாட்களில் பல்வேறு காரணங்களுக்காக கம்பஹாவிற்கு பயணம் செய்த 60 பேரின் மாதிரிகள் கடந்த 23 ஆம் திகதி பி.சி.ஆர்.பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பெலியகொட பகுதிக்கு சென்ற ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்களுக்கும் இதேபோன்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின்பேரில் பிற மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# நெடுந்தூர பயண பேருந்து சேவைகள் மீள் அறிவிக்கும் வரையில் இரத்து

கொழும்பிற்கு வரும் அனைத்து நெடுந்தூர பயண பேருந்து சேவைகள் மீள் அறிவித்தல் வரும் வரையில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொழும்பில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாரஹேன்பிட்ட மற்றும் வேரஹெர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகங்களையும் மீள் அறிவித்தல் வரும் வரையில் மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களின் ஊடாக கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கை மீள் அறிவித்தல் வரும் வரையில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேல் மாகாணத்திலும் காலி பிரதான தபால் காரியாலயம் மற்றும் அதன் உப தபால் அலுவலகங்கள் உட்பட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடிதம் விநியோகித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய தபால் பரிமாற்றத்தின் நடவடிக்கைகளும் மீள் அறிவித்தல் வரும் வரையில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.